செய்தி வெளியீடு எண் : 374 நாள் : 24.02.2023

**செய்தி வெளியீடு**

சேலம் மாவட்டம், பெத்த நாயக்கன்பாளையம் வட்டம், பாப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள கரியகோயில் நீர்த்தேக்கத்திலிருந்து பழைய பாசனப் பகுதிகளுக்கு 03.03.2023 அன்று காலை 8 மணி முதல் அணையின் தலைமை மதகுகளின் மூலம் 40 கனஅடி/வினாடி என நாளொன்றுக்கு 3.45 மில்லியன் கன அடி வீதம் 24 நாட்களுக்கு 82.80 மில்லியன் கன அடிக்கு மிகாமலும், புதிய பாசனப் பகுதிகளுக்கு 27.03.2023 அன்று காலை 8 மணி முதல் அணையின் வலது புற கால்வாயின் மூலம் 15 கனஅடி/வினாடி மற்றும் இடது புற கால்வாயின் மூலம் 15 கனஅடி/வினாடி என மொத்தம் 30 கனஅடி/வினாடி வீதம் நாளொன்றுக்கு 2.59 மில்லியன் கன அடி வீதம் 21 நாட்களுக்கு 54.39 மில்லியன் கன அடிக்கு மிகாமலும், அதனை 25 நாட்களுக்கு சுழற்சி முறையில் சிறப்பு நனைப்பாக (special wetting), தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது.

இதனால் சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டத்திலுள்ள பாப்பநாயக்கன்பட்டி, தும்பல் மற்றும் இடையப்பட்டி ஆகிய கிராமத்திலுள்ள பாசன நிலங்கள் பாசன வசதி பெறும்.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**
**நீர்வளத்துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in